# அழகையா துரைராசா - ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

### செயற்றிட்ட அறிமுகம்

பேராசிரியர் அழகையா துரைராசா, 1934 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வடமராட்சியிலுள்ள உடுப்பிட்டி, இமையாணன் என்னும் ஊரில் வேலுப்பிள்ளை அழகையா அவர்களுக்கும் செல்லம்மா ஆகியோரது மகன் ஆவார், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி ஆகிய உயர் கல்லூரிகளில் தனது ஆரம்ப உயர்கல்வியை முடித்துக்கொண்டார். இவ்விரு கல்லூரிகளினதும் பழைய மாணவர் சங்க தலைவராக இறுதிவரை இருந்ததோடு அவற்றின் வளர்ச்சிப் பணிகளில் முன்னின்று உழைத்தார்.

1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் பொறியிற்றுறை பேராசிரியர் பதவியை ஏற்றார். பின் 1975-1977 ஆண்டு காலப்பகுதியில் பேராதனை பொறியியற்பீட பீடாதிபதியாக கடமையாற்றினார். புவிசார் தொழில்நுட்ப பொறியாளர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கினார். குறிப்பாக மண் பொறிமுறையில் (Solid Mechanics) முன்னோடி விஞ்ஞானியாக திகழ்ந்து உலகின் அதிசிறந்த விஞ்ஞானிகளுடன் இத்துறையில் பணியாற்றி, அவர்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்றவராக காணப்பட்டார்.

இச்செயற்றிட்டத்தின் மூலம் இலங்கையின் பொறியியல் துறையின் சாதனைகளையும் இத்துறைக்கு இவர் ஆற்றிய பங்களிப்புக்களையும் ஆவணப்படுத்தல் அவசியமாகும்.

### செயற்றிட்ட நோக்கம்

இச்செயற்றிட்டம் மூலம் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் ஆற்றிய பணிகள் அவர் பணிபுரிந்த இடங்கள், அவரால் பொறியியற் துறைக்கு கிடைக்கு , அவரது ஆக்கங்கள் மற்றும் கையெழுத்துப்பிரதிகள் ஆகிடவற்றை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தலுடன் அவருடன் தொடர்புபட்ட நபர்களை இனங்கண்டு அவர்களது வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல் .

## எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

- பேராசிரியர் அழகையா துரைராசா நிறுவிய பொறியியற் கட்டுமானத்துறை பற்றிய விடயங்களை ஆவணப்படுத்தல்
- பேராசிரியர் அழகையா துரைராசா மற்றும் அவரது பொறியியற் துறை சார் நபர்களது வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல்.
- மேற்கூறிய செயற்பாடுகளை பூரணப்படுத்துவதன் மூலம் பேராசிரியர் அழகையா துரைராசா சார் அனைத்து விடயங்களும் ஆவணப்படுத்தப்படும்.

## செயற்றிட்ட காலம்

ஒரு வருட காலப்பகுதிக்குள் பேராசிரியர் அழகையா துரைராசா படைப்புக்கள் அவரது ஆக்கங்கள் அவர் நிறுவிய நிறுவனங்களது வரலாறுகள் அவரது சமூகப்பணி குறித்த விடயங்கள் மேலும் அவரது வரலாற்றோடு தொடர்புபட்ட அவரது பணிகளை இன்று வரை எடுத்துச் சென்றுகொண்டிருக்கிற நபர்கள் பற்றிய வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**